# உலக திருமண நாள்

ஞாயிறு 11 பிப்ரவரி 2024

கருப்பொருள்: **திருமணத்தில் மறுமலர்ச்சி**

கருத்து வசனம்: யோவான் 10 : 10 (பி)

வேதபாடப்பகுதி: மல்கியா 2 : 11–16
எபேசியர் 5 : 21–33
சங்கீதம் 127 & 128
மத்தேயு 19 : 3 – 9

<u>முகவுரை:</u>

திருமணம் என்பது ஓர் அழகான தோட்டமாகும். தேவன் ஆதாமுக்கும் ஏவாளுக்கும் கொடுத்த ஆசீர்வாதமான ஏதேன் போன்றதாகும். தேவன் திருமணத்தை ஆசீர்வதித்து மிகுந்த கனிதரும்படியாகவும், அதிகாரமுடையவராகவும், எல்லாவற்றிற்கும் மேலாக வைத்தார்.

மனிதன் பாவம் செய்ததால் அதை இழந்தான். பாவமுடைய திருமணத்தில் தேவனுடைய பிரசன்னம் இருப்பதில்லை. ஆனால் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து நமக்காக மீட்கும் விலைக்கிரயமானார் மற்றும் அவர் தமது இரத்தத்தை விலையாக செலுத்தி திருமணத்தின் அனைத்து உடன்படிக்கையின் ஆசீர்வாதங்களையும் நமக்காக மீட்டெடுத்தார்.

திருமணம் ஏன் புதுப்பிக்கப்பட வேண்டும்?

- உயிரற்ற திருமணங்கள்: கணவனும் மனைவியும் தோழமையுடன் வாழாமல் ஒரே வீட்டில் அந்நியர்களாக வாழ்வது
- வெதுவெதுப்பான திருமணங்கள்: கணவனும் மனைவியும் அன்பை முதலீடு செய்வதற்குப் பதிலாக ஒருவரையொருவர் சாதாரணமாக எடுத்துக் கொள்வது.
- அடிமைத்தனத்தில் கட்டப்பட்டுள்ள திருமணங்கள்: திருமணம் என்பது சிலுவையின் வல்லமையால் மீட்கப்படுவதற்குப் பதிலாக கணவன்–மனைவி அடிமைத்தனம் / தகாத உறவு போன்றவற்றில் சிக்கிக் கொண்டிருப்பது.

- இருள் நிறைந்த/இருண்ட திருமணங்கள்: இப்படிப்பட்ட திருமணத்தில் பாதிக்கப்பட்டவர்கள் உறவில் மூச்சுத்திணறல் மற்றும் இருள் காணப்படும். அவர்கள் தங்கள் திருமணத்தில் எதிரி கட்டியிருக்கும் கோட்டைகளை கண்டு கொள்ள வேண்டும். இயேசு என்ற நாமம் மற்றும் அவரது வார்த்தையின் வல்லமையினால் திருமணத்தில் உள்ள இருளை முற்றிலும் அழிக்க வேண்டும்.
- நோக்கமற்ற திருமணங்கள்: தேவன் கணவன்–மனைவியை ஒரு நோக்கத்தோடு இணைத்திருக்கிறார் என்பதை சிலர் உணருவதில்லை. எனவே அவர்கள் தங்கள் போக்கில் வாழ்க்கையை வாழ்கின்றனர்.

திருமணத்தை எவ்வாறு புதுப்பிக்க முடியும்?

முதல் நிலை– மறுசீரமைப்பு

- மீட்பர் இயேசுவுடன் இணைந்திருங்கள்: ஜீவனை அழிக்கக் காத்திருப்பவனை துண்டித்துவிடுங்கள் (யோவான் 10:10)
- உடன்படிக்கை திருமணத்தில் தேவனும் ஒருவர் என்பதை கணவன்–மனைவி நினைவில் கொள்ள வேண்டும். (மல்கியா 2:14)
- கணவனும் மனைவியும் தங்கள் திருமண வாழ்வில் வளமான வாழ்க்கையை அனுபவிக்க, இயேசுவின் மீட்பின் செயலை தங்கள் திருமணத்தில் அனுபவிக்க வேண்டும்.
- திருமணத்திற்கான கடவுளின் வார்த்தையுடன் ஒத்துபோதல்/ திருமணத்தைப் பற்றிய உலகின் பார்வையை நிராகரித்தல் (1 கொரி. 2: 12, 13)

இன்று உலகம் திருமணத்தை அழித்துவிட்டது மற்றும் திருமணத்தை மறுவரையறை செய்ய முயற்சிக்கிறது. ஆனால் ஒரு உண்மையான விசுவாசியாகிய நான் ஆண்டவருடைய வார்த்தை திருமணத்தைக் குறித்து என்ன சொல்கிறது என்பதை அறிந்திருக்க வேண்டும்.

நம் கலாச்சாரம் மாறலாம். ஓர்பாலின திருமணங்கள் அதிகரித்தல்/திருமணம் செய்து கொள்ளாமல் ஒன்றாக வாழ்வது உள்ளிட்டவை அதிகரித்துள்ளது. ஆனால் தேவனுடைய வார்த்தை மாறுவதில்லை. இன்றும் அப்படியே உள்ளது. நாம் தெளிவாக இல்லாவிட்டால் நம் பிள்ளைகளின் ஒழுக்க சீர்கேட்டை தடுக்க முடியாது.

- வல்லமையைப் பெற்றுக் கொள்ள பரிசுத்த ஆவியுடன் இணைந்திருங்கள் / மாம்சத்தைச் சார்ந்திருப்பதை துண்டித்துவிடுங்கள் (சகரியா 4:6)
- கணவனும் மனைவியும் தங்கள் தனிப்பட்ட வாழ்க்கையிலும், திருமணத்திலும் பரிசுத்த ஆவியின் வல்லமையை பெற்று அனுபவிக்க வேண்டும்.
- உங்கள் திருமணத்தில் தேவனுடைய நோக்கத்திற்கு ஏற்ப இணைந்து, எதிரியின் சதியை நிராகரிக்கிரேன் என்று சொல்லுங்கள் (கொலோ. 1 : 16).

கணவனும் மனைவியும் ஒன்றிணைவதில் ஆண்டவருக்கு ஒரு நோக்கம் இருப்பதாக நம்ப வேண்டும். அவர்கள் தங்கள் அழைப்பை அறிந்திருக்க வேண்டும்.

2–ம் நிலை – தூய்மையாக இரு/சுத்திகரிக்கப்பட்டு இரு

- இயேசுவின் இரத்தத்தால் கழுவப்பட்டு பரிசுத்தமாக்கப்படுங்கள்

  நம்முடைய திருமணம் பரிசுத்தமாகவும், மாசற்றதாகவும் இருக்க வேண்டும் என்று தேவன் விரும்புகிறார்
  (எபிரேயர் 13:4)

  நாங்கள் எங்கள் திருமண படுக்கைகளை பல்வேறு வழிகளில் தீட்டுப்படுத்தியுள்ளோம் என்பதை ஏற்றுக் கொண்டு அறிக்கையிடுங்கள் (நீதி 28:13)

  நம்முடைய பாவங்கள் இயேசுவின் இரத்தத்தால் கழுவப்பட மன்றாடுங்கள் (1 யோவான் 1:7)

- மேலும் பரிசுத்தப்படுத்துங்கள் & பரிசுத்தமாக்கப்பட்டு தேவனுக்காக அர்ப்பணியுங்கள் (1 தெச. 5: 23)
- பரிசுத்தமான வாழ்க்கை என்பது தேவனுக்காக ஒதுக்கப்பட்ட, அர்ப்பணிக்கப்பட்ட வாழ்க்கை
- சுத்திகரிக்கப்பட்ட வாழ்க்கை ஒரு பரிசுத்த வாழ்க்கை
- பரிசுத்தமான வாழ்க்கை தேவன் நம் வாழ்வில் செய்யும் அற்புதங்களை பார்க்க நமக்கு உதவும் (யோசுவா 3:5)
- பரிசுத்தமான வாழ்க்கை வெளிச்சத்தின் பிள்ளைகளாக நடக்க நமக்கு உதவும் (எபே 5:8)
- ஒவ்வொரு திருமணமும் சுத்திகரிக்கப்பட வேண்டும்.

3–ம் நிலை – பரிசுத்த ஆவியினால் வல்லமையடையுங்கள்

- பரிசுத்த ஆவியானவரின் பிரசன்னம் மற்றும் வல்லமையின் மிகுதியால் நிரப்பப்பட்ட திருமணமே தேவன் விரும்பும் திருமணமாகும்.
- எனவே, நாம் பரிசுத்த ஆவியானவரை நம் திருமணத்திற்குள் அழைக்க வேண்டும்.
- பரிசுத்த ஆவியானவரின் சத்தத்திற்கு நாம் கீழ்ப்படிய வேண்டும். ஏனென்றால் நம் திருமணத்தின் ஒவ்வொரு சூழ்நிலையையும் பற்றிய உண்மையை அவர் அறிந்திருக்கிறார். (யோவான் 16:13).
- அவரால் பயன்படுத்தப்பட தயாராக இருங்கள். நாம் நமது திருமணத்தில் பரிசுத்த ஆவியை அனுமதிக்கும்போது அவர் நமக்கு மிகுந்த தைரியத்தை தருவார்.

<u>முடிவுரை:</u> திருமணங்கள் இயேசுவால் மீட்கப்பட்டு, தேவனால் பரிசுத்தப்படுத்தப்பட்டு, பரிசுத்த ஆவியானவரின் வல்லமையால் திருமணங்களில் மறுமலர்ச்சி ஏற்படும். ஒவ்வொரு புத்துயிர் பெற்ற திருமணமும் கடவுளின் ராஜ்யத்தில் ஒரு வல்லமை வாய்ந்த கருவியாக மாறும்.